1978 மார்ச் 11]

மாடுகள் வளர்க்க விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள். அந்த மாடுகள் புயலால் அதிகமாகச் செத்திருப்பதாகவும் கேள்விப் படுகிறோம். அப்படிச் செய்திருந்தால் உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா? அப்படி விடக்கூடிய மாடுகளைப் பாதுகாப்பாக வளர்க்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. ஹெரா. எட்மண்ட்: தலைவரவர்களே, மான்கள் தாராளமாக வாழ்கின்ற காடுகளில் மாடுகள் இறப்பது என்பது ஆச்சரியமாகத்தானிருக்கிறது. ஏனென்றால், பொதுவாக, மான்கள் மாடுகளை அடிப்பதில்லை.

ராதா நரசிம்மபுரத்தில் நியாயவிலைக் கடை.

*511 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மன்னார்குடி தாலுக்கா 129/1 ராதா நரசிம்மபுரம் கிராமத்தில் அரிசி மற்றும் இதர அத்தியாவசியப் பண்டங்கள் வழங்க நியாய விலைக்கடை ஒன்று திறக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. ஹெரா. எட்மண்ட்: நியாயவிலைக் கடைகளைத் திறக்கும் திட்டத்தை முதற்கட்டமாக நெல்லை, மதுரை, முகவை, குமரி மாவட்டங்களில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களுக்குப் படிப் படியாக விரிவாக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, 16,000 கடைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட பொழுது, நெல்லை, குமரி என்று அறிவிக்கப்படவில்லை. அனைத்து இடங்களிலும் என்று எதிர்பார்த்தோம். அவசரமாக, தஞ்சை மாவட்டத்திலே துவக்குவதற்கும், அனைத்துக் கிராமங்களிலும் துவக்குவதற்கும் அரசாங்கம் வேகமாக, துரிதமாக, அவசரமாக நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. ஹெரா. எட்மண்ட்: தலைவர் அவர்களே, நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட

இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 16,000 நியாயவிலைக் கடைகள் இருப்பதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்யும் என்றுதான் சென்ற ஆண்டு நிதி-நிலை அறிக்கையிலே நிதியமைச்சரும், ஆளுநரும் தெரிவித்தார்கள்.

ஏற்கனவே, கூட்டுறவுத் துறை, உணவு வழங்கு துறை மூலமாக 9,000 கடைகள் இந்த மாநிலத்திலே இயங்கி வருகின்றன. அந்தக் கடைகளில், அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருள்கள் மாத்திரம் இப்பொழுது விநியோகம் செய்யப் படுகின்றன. இவைகளையெல்லாம் மாற்றி, அவற்றையே நியாய விலைக் கடைகளாக மாற்றி, பொது விநியோக முறையிலே அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதோடு, மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான பண்டங்களையும் அங்கே விற்க ஏற்பாடுகளைச் செய்யும் என்ற அடிப்படையில்தான் 16,000 கடைகளை இந்த அரசு கிராமங்களிலே திறக்கும் என்று அறிவித்தது. மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏற்கனவே, கூட்டுறவுத் துறை மூலமாகவும், அதே போல், உணவு வழங்கு துறை மூலமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற பல்வேறு கடைகளின் மூலம் இன்றைய தினம் அத்தியாவசியப் பொருள்களை வழங்குவது, நியாயவிலைக் கடைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அதைப் போல், திருநெல்வேலியில் ஏறத்தாழ 300-க்கும் அதிகமான நியாயவிலைக் கடைகள் ஏற்கனவே துவங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அடுத்த முயற்சியாக, மதுரை, முகவை, குமரி மாவட்டங்களில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

(பல உறுப்பினர்கள் கையை உயர்த்திக் கொண்டிருந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மன்னார்குடி தாலுக்கா ராதா நரசிம்ம புரத்தில் நியாய விலைக் கடை திறக்க உத்தேசம் உண்டா என்பது கேள்வி. அமைச்சரவர்கள் அதற்கு மட்டும் பதில் சொல்லியிருக்கலாம்.